S.C.No. 207/2021 நாள் 27.04.2026 PW 10 – டாக்டர்.திரு.நவநீதபிரபு

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

எனக்கு வழக்கின் சரித்திரம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதன்அடிப்படையில்தான் இறந்த நேரத்தை நான் நிர்ணயம் செய்தேன் என்றால் இல்லை. Postmortem lividity நான் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயங்களின் அடிப்படையில் இறப்பானது மாலை 7.00 மணிக்குகூட நடந்திருக்கலாம் என்றால் வாய்ப்புள்ளது. 10 காயங்களுமே அவர் கீழே படுத்திருக்கும்போது ஏற்பட்டதாகத்தான் உள்ளது என்றும், ஓடிகொண்டிருக்கும்போது ஏற்பட்ட வாய்ப்புள்ளதா என்றால் அது பற்றி குறிப்பாக கருத்து கூற இயலாது. ஒன்று முதல் 10 காயங்கள் ஓடி கீழே விழுந்து வெட்டும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். ஓடும்போது வெட்டுப்பட்டிருந்தால் vertical injuries தான் ஏற்படும் என்றால் அவ்வாறாக ஏற்பட அவசியமில்லை. உடலின் பின்பக்கத்தில் ஏற்பட்ட காயங்கள் செங்குத்தாக இல்லை என்றாலும் குறுக்காக உள்ளது என்றாலும் சரிதான். ஒன்று முதல் 10 காயங்கள் சிதைந்த காயங்களாக உள்ளது என்றால் சரிதான், கூர்மையான ஆயுதத்தால் திரும்ப திரும்ப வெட்டும்போது சிதைந்த காயங்கள் ஏற்படும். ஒரே இடத்தில் வெட்டும்போதுதான் சிதைந்த காயங்கள் ஏற்படும் என்றால் காயம் எண்.9 ஆழமான வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. மற்ற காயங்கள் சிதைந்த காயங்கள் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆயுதங்களின் ஓரங்கள் மழுங்கியிருந்தால் சிதைந்த காயங்கள் ஏற்படும். சிதைந்த காயங்கள் கூர்மையான அரிவாளை வெட்டும்போது வராது

என்றால் திரும்ப திரும்ப வெட்டும்போது ஏற்பட வாய்ப்புள்ளது. 9 வது காயம் ஒரு ஆயுதத்தாலும், மற்ற காயங்கள் வேறு ஒரு ஆயுதத்தாலும் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புள்ளது. 9 சிதைந்த காயங்களும் ஒரே ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். stomach contents இல்லை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 12 மணியிலிருந்து 24 மணிநேரத்திற்குள் மரணம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று கூறியுள்ளநிலையில் மாலை 7 மணி முதல் 7.30 மணிக்குள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

S.C.No. 207/2021 நாள் 27.04.2026 PW 13– .திரு. பெர்னாட் சேவியர்

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

சம்பவ சமயத்தில் நான் காவல்நிலையத்திலிருந்து வெளியே இருந்தேன் என்றால் சரிதான். நான் வெளியே வைத்துதான் புகார்மனு வாங்கினேன் என்றால் முதல்தகவல் அறிக்கையோடு புகார்மனுவை வெளியே வைத்து பெற்றேன். முதல்தகவல் அறிக்கையை நான் காவல்நிலையத்தில் வைத்து எனது பார்வைக்கு வைக்கப்பட்டு நான் பார்வையிட்டதாக அ.சா.ஆ– 10ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் பார்வைக்கு அங்கு வைத்திருப்பார்கள், நான் பெற்றது வெளியே வைத்துதான். ஒரே ஒரு முதல்தகவல் அறிக்கைதான் வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்திலிருந்து சம்பவ இடம் 10 கி.மீ தள்ளி உள்ளது என்றால் சரிதான். சம்பவம் சம்மந்தமாக அம்பலசேரி கிராமத்திலிருந்து எனக்கு போன் எதுவும் வந்ததா என்றால் இல்லை. காவல்நிலையத்திற்கு வந்ததா என்றால் நான் காவல்நிலையத்தில் இல்லாததால் அது பற்றி எனக்கு தெரியாது. 5 மணி நேரம் கழித்து புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அசல் புகார்மனுவை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை, நகல்தான் பார்வையிட்டேன். அ.சா.ஆ–1ல் அ.சா.1 தான் புகார்மனுவை எழுதியதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் அ.சா.1 தான் புகார்மனுவை எழுதிக்கொடுத்துள்ளார். புகார்மனுவில் 2வது எதிரியின் பெயரும், அடையாங்களும் இல்லை என்றால் சரிதான். 2வது எதிரி அந்த ஊரான கீழ அம்பலசேரியை சார்ந்தவர் என்றால் சரிதான்.

அ.சா.1 க்கு தெரிந்தவர்தான் என்றால் அது பற்றி தெரியாது. இந்த வழக்கில் எதிரிகள் மோட்டார் சைக்கிளில் வந்து பண்ணியதாக உள்ளது என்றால் சரிதான். அந்த மோட்டார் சைக்கிளின் நிறம் சிவப்பு என்று உள்ளது என்றால் சரிதான். இறந்தவர் பஸ்ஸ்டாப்பிலிருந்து ஓடிதான் கோவில் பக்கம் போய் விழுந்தார் என்றால் சரிதான். அவர் ஓடும்போது எந்த வெட்டுக்களும் விழுந்தமாதிரி இல்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. அவர்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்துதான் சொல்லியுள்ளார் என்றாலும், அரிவாள்களை என்று சொல்லவில்லை என்றால் இரண்டு எதிரிகளும் தனித்தனியாக அரிவாள் வைத்திருந்ததாக சொல்லப்பட்டுள்ளது. சம்பவம் நடக்கும்போது இரவு 7.00 மணி முதல் 7.30 மணி இருக்கும் என்றாலும், இருட்டில்தான் நடந்தது என்றாலும் சரியல்ல. சம்பவ நேரத்தை முன்பு மாலை 6.00 மணிக்கு நடந்ததாக தள்ளி போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பு முன்சம்பவத்திற்கு முன்பு இறந்தவருக்கும், எதிரிகளுக்கும் எந்த முன்விரோதம் இருந்ததாக வழக்கில் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ–10 ல் எதிரி முன்சம்பவத்தின்போது வீட்டிலிருந்து வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சிவப்பு மோட்டார் சைக்கிளை பொய்யாக சேர்த்துள்ளோம் என்றும், சம்பவத்தின்போது சிவப்பு மோட்டார் சைக்கிள் 1 ம் எதிரியிடம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னமாதிரி 1 ம் எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ 3, மற்றும் 4 அத்தாட்சி எல்லாம் கையால்தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.4 அத்தாட்சியில் அரிவாளை கைப்பற்றியதில் இரத்தக்கறை இருந்ததாக இல்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஆவணங்கள் தயார் செய்யவில்லை

என்றாலும், சாட்சிகளின் வாக்குமூலங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அ.சா.1,2 வாக்குமூலங்கள் பிரேத விசாரணைக்கு பிறகுதான் மறுநாள் 9 மணிக்குமேல் 11.00 மணிக்குள்தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை நான் எத்தனை மணிக்கு பார்வையிட்டேன் என்றால் 03.03.2021 அன்று காலை 7.00 மணிக்கு பார்வையிட்டேன். 03.03.2021 அன்று இரவு 3.00 மணிக்கே சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன் என்றாலும், பின்பு முதல்தகவல் அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியை தயார் செய்து அ.சா.ஆ–1 பெறப்பட்டு அ.சா.ஆ–10 காலை 9.00 மணிக்குத்தான் தயார் செய்யப்பட்டு, காலை 10.30 மணிக்குத்தான் நீதிமன்றம் சென்றடைந்தது என்றால் சரியல்ல. நான் எத்தனை மணி வரை சம்பவ இடத்தில் இருந்தேன் என்றால் காலை 7.00 மணி முதல் 8.30 மணி வரை இருந்தேன். அப்போது அ.சா.1 ஐ விசாரித்தேனா என்றால் அங்கு வைத்து விசாரித்தேன். பிரேத விசாரணை சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் நடந்தது என்றால் சரிதான். அங்கு வைத்து அ.சா.1, அ.சா.2 ஐ விசாரிக்கவில்லை என்றால் அவர்களை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன். 8.15 மணி முதல் 8.30 மணியளவில் அ.சா.1 ஐ சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன். என்னுடைய புலன்விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும், சம்பவம் நடந்து ஒரு மணி நேரத்திலேயே போய்விட்டேன் என்றாலும் சரியல்ல. யார் அவரை வெட்டினார் என்று தெரியாததால் காலை 9.30 மணிவரை சாட்சிகளை விசாரணை செய்து 1 வது சாட்சியை வைத்து பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வாக்குமூலங்கள், மற்றும் ஆவணங்கள் காவல்நிலையத்தில்வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது

என்றாலும் சரியல்ல. எதிரிகள் மீது பழி போடுவதற்காக எனது புலன்விசாரணை சென்றுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

| |
|---|
| Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct<br><br>II Additional District& Sessions Judge,<br>Thoothukudi. |